RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22315

# ஆதன் மரபில் தந்தை, மகன் குறித்த ஆளுமைத்திறன்

மு. மஞ்சுளா [அ, *], பா. ஜெய்கணேஷ் [ஆ]

[அ] தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர்-603203, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்-603203, தமிழ்நாடு, இந்தியா

# In Adan Tradition the Personality Traits about Father and Son

**M. Manjula [a, *], B. Jaiganesh [b]**

[a] Department of Tamil, SRM Arts and Science, Kattankulathur-603203, Tamil Nadu, India

[b] Department of Tamil, SRM Institute of Science and Technology, Kattankulathur-603203, Tamil Nadu, India

* Corresponding Author: manjulam750005@gmail.com

Received: 11-02-2022
Revised: 21-05-2022
Accepted: 26-05-2022
Published: 05-07-2022

Check for updates

## ABSTRACT

'Otha padhithru pathu' It is the Book belongs to the 'Etthu Thogai' literature and it tells about the outer life. In this literature it denotes the special about the ancient tamilians ruling power, war victories and donations. This book is a historical document only about the King's of cherans. Kadalpiragottiya Senguttuvan is the son of Immayavaramban Neduncheralathan is the song leader of Second of the ten songs. In this Padhitru Pathu fifth ten part songs tells about the personality traits, straight forward way of victories, good rule for the people and they donated every thing to the people without saying the word No. Both of the leader for father and son did above thing. They lead the country for the people like the light house. It is the description's of above research.

**Keywords:** Adan, Personality Traits, Father and Son, Research.

## முன்னுரை

பாட்டும் தொகையுமான சங்க இலக்கியத்தில் பதிற்றுப்பத்து நூல் எட்டுத்தொகையில் புறப்பொருள் நூல்களில் ஒன்றாகும். சேர மன்னர்களின் வரலாற்றினை எடுத்துக்கூறும் வரலாற்றுப் பெட்டகமாகும். பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் அவன் மகனான ஐந்தாம் பத்தின் பாட்டுடைத் தலைவனுமான கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனும் ஆளுமைத்திறனுடன் வினையாற்றி, மறப்பண்பின் வெளிப்பாடாக அறவழியில் பல வெற்றிகள் பெற்றும் செங்கோலாட்சியின் விளைவாக மக்கள் அனைவருக்குமான நல்லாட்சி வழங்கியும் கொடைப்பண்பின் பயனாக நாட்டில் எங்குமே இல்லை என்ற சொல்லையே இல்லாமல் செய்தும், காலத்தை வென்றவர்களாக அரசு வீற்றிருந்தமையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## வேந்தர்

நாடு காவல் புரியும் அரசன் மக்களின் உயிர் ஆவான். மக்களின் நலன் கருதியே செயலாற்றுவது ஆளும் அரசனின் கடமையாகும். அதனால் தான் "சங்க இலக்கியங்கள்

ஆட்சித்தலைவனை வேந்தன், மன்னன், அரசன், இறை அல்லது இறைவன், காவலன் என பல்வேறு பெயர்களில் சுட்டுகின்றன" என்று சங்க இலக்கியத்தில் வேந்தர் நூலில் (Ramalingam Aranga., 2002) குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னர் ஆட்சிக் காலம்

வேந்தர்கள் தலைமைப் பொறுப்பினை ஏற்றுத் திறம்பட ஆட்சிபுரிந்த காலமாகத் திகழ்ந்ததால், அந்தக் காலம் 'மன்னர் ஆட்சிக் காலம்' என்ற பெருமையினைப் பெறுகிறது. 'அக்கால தமிழக அரசியல் "முடியாட்சி' என்ற பெயரால் நடைபெற்றக் குடியாட்சியாகவே விளங்கினமை அறியமுடிகிறது" என்று சங்க காலத் தமிழ் மக்கள் நூலில் எடுத்துரைத்துள்ளார் (Vellaiwaranan, 2012). முடியுடை வேந்தர் மூவரும் பெரும்வேந்தர்களாகக் கோலோச்சி செங்கோலாட்சிப் புரிந்தனர். "பண்டைத் தமிழகம் சேர, சோழ, பாண்டியர் மூவேந்தருக்கும் உரியதாக இருந்தது. இவர்கள் ஆண்ட நிலப்பகுதி 'மூவர் உலகம்' என்றும் 'வண்புகழ் மூவர்' என்றும் 'தண்பொழில் வரைப்பு' என்றும் போற்றப்படுகிறது" என்று பண்டைத் தமிழர் வாழ்வியல் நூல் கூறுகிறது (Rasamanikkam, 2015).

## தொன்மை

சேர, சோழ, பாண்டியர்களில் யார் தொன்மை வாய்ந்தவர் என்று ஆய்வுகள் பல நிகழ்த்தப்பட்டுவருகின்றன. இவர்களில் பாண்டியர், சோழர்களைக் காட்டிலும் சேரர்களே தொன்மையானவர்கள் என ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர். இதனை முடியுடை வேந்தர்களில் "சோழர், பாண்டியர்களைக் காட்டிலும் சேரர்கள் தொன்மையானவர்கள் என ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர்" என்னும் கூற்று உறுதிசெய்கிறது (Ramakrittinan, 2015).

## குடிமரபும் நிலைப்பாடும்

சேர மரபு "உதியஞ்சேரல் மரபு, இரும்பொறை மரபு என இருவகைப்படும். உதியஞ்சேரல் மரபினர் வஞ்சியைத் தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தனர். இரும்பொறை மரபினர் தொண்டிக் கடற்கரைப் பகுதியை ஆட்சி புரிந்தனர். எனினும் இவ்விரு பிரிவினரும் தங்களுக்குள் மாறுபட்டு நிற்கவில்லை என்றும் அதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை" என்றும் சேரன் செங்குட்டுவன் நூல் உரைக்கின்றது (Mayilai Seeni Venkadasamy, 2007).

### காரணப் பெயரும் கொடியும் மாலையும்

நாட்டிற்குப் பெயர் சூட்டும் முறையானது ஆழ்ந்த புலமைக்கான வெளிப்பாடாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. "மலைகள் அடுக்கடுக்காக நெருங்கி இருப்பதற்கு சேரல் என்று பெயர். மேற்குத் தொடர்ச்சி மலையானது பல அடுக்குகளைக் கொண்டது. அம்மலைக்கு உட்கொண்டு மலைக்கும் கடலுக்கும் இடையில் உள்ள நாடு முழுவதும் சேர நாடு எனப்படும். அதனால் அந்த அரசர்களுக்கு சேரலர் என்று பெயர் அமைந்தது" என்று சேரர் வரலாறு நூல் கூறுகிறது (Chidambaranar, 1963). சேரவேந்தர்கள் விற்கொடியையும் பனம்பூ மாலையையும் அடையாளங்களாகக் கொண்டனர்.

சேர வேந்தர்கள் "குட்டுவன், கடுங்கோ, குடக்கோ, கோதை, இரும்பொறை, பொறையன், வானவரம்பன் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். அப்பெயர்கள் குடிப்பெயர்களாக வந்திருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்" என்ற கருத்தைப் பண்டைத் தமிழர் வாழ்வியல் நூல் உரைக்கின்றது (Rasamanikkam, 2015).

## திணை

பதிற்றுப்பத்து நூல் பாடாண் திணையாலானது. பாடாண் திணை என்பது பாடப்படும் ஆண் மகனது வீரம் கொடை, ஈகை போன்றவற்றைச் சிறப்பித்துப் பாடுவதாகும். இந்நூலினைத் தொகுத்தவர் பெயரையும்,தொகுப்பித்தவர் பெயரையும் அறியமுடியவில்லை. இந்நூலில் ஒவ்வொரு பத்திலும் ஒரு பதிகம் இடம் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு வேந்தனுக்கும் பாடப்பட்ட பத்து பாடல்களின் சாறினைத் தொகுத்துப் பதிகமாக உரைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இந்நூலைத் தொகுத்தவரே பதிகத்தினை இயற்றியவராகவும் கருதமுடிகிறது.

## பதிற்றுப்பத்தில் இடம்பெறும் சேரர்கள்

பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்து முதல் ஒன்பதாம் பத்து வரையிலான எட்டு பத்துகளில் 80 பாடல்கள் கிடைத்திருக்கின்றன. முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கப்பெறவில்லை. அதனால் அவ்வேந்தர்கள் யார் என அறிய முடியாத நிலையிருக்கிறது.

## பதிற்றுப்பத்துக் காட்டும் வேந்தர்கள்

1. இரண்டாம் பத்து - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,
2. மூன்றாம் பத்து - பல்யானைச் செல்கெழுகுட்டுவன்,
3. நான்காம் பத்து - களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்,
4. ஐந்தாம் பத்து - கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்,
5. ஆறாம் பத்து - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்,
6. ஏழாம்பத்து - செல்வக்கடுங்கோ வாழியாதன்,
7. எட்டாம்பத்து - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை,
8. ஒன்பதாம்பத்து - குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை ஆகியோராவர்.

## புலவரும் பரிசிலும்

“இரண்டாம் பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ளார். பாடியதற்காக உம்பற்காட்டு ஐநூறு ஊர்களையும் 38 ஆண்டுகள் வருவாயில் பாகமும் பரிசாகக் கொடுத்தான் என அறியமுடிகிறது” (Puliyur Kesigan, 2017).

“ஐந்தாம் பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியுள்ளார். பாடியதற்காக உம்பற்காட்டு வருவாயும், தன்மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகக் கொடுத்துள்ளான் என தெரியவருகிறது”.(பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து, பதிக அடிக்குறிப்பு)

## தாயின் பெயருக்குப் பெருமை சேர்க்கும் மரபு

வேந்தனின் பெயரை அறிமுகப்படுத்தும் பொழுது தாயின் பெயரையும் சேர்த்தே குறிப்பிட்டிருப்பது சிந்தனையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. “இவன் இன்னாரின் மகன் எனத் தந்தையின் பெயரையே குறித்துச் சொல்லப்படும் மரபினுக்கு மாறாக ‘இன்னார் இன்னவனுக்கும் இன்னவளுக்கும் பிறந்த மகன்” எனத் தாயின் பெயரையும் சேர்த்தே உரைக்கும் குடி மரபினைப் பதிற்றுப்பத்து பதிகங்கள் உணர்த்துகின்றன” என்று பதிற்றுப்பத்து தெளிவுரை கூறுகிறது (Puliyur kesigan, 2017).

## பெற்றோரும், அரசு வீற்றிருந்த காலமும், புலவரின் கவிச்சிறப்பும்

“உதயஞ்சேரலுக்கும் வேண்மாள் நல்லினி தேவிக்கும் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். 58 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான்”.

“மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி

இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு,

வெளியன் வேண்மாள் நல்லினி யீன்றமகன்” (Puliyur Kesigan, 2017)

“இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் மணக்கிள்ளிக்கும் பிறந்தவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன். 55 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான்”

“வடவர் உட்கும் வான்நோய் வெல்கொடிக்

குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்

சோழன் மணக்கிள்ளி யூன்ற மகன்” (Puliyur Kesigan, 2017). மேலும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் பதுமன் தேவிக்கும் பிறந்தவர்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் என்பதும் குறிப்பிடத்தக்கது. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்பானும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் ஒருவனே எனக் கருதமுடிகிறது. இவனது மறப்பண்பையும் தமிழ்ப்பற்றையும் கொடைப்பண்பையும் கழாத்தலையாரும் (Sivaprakasam, 2007) பரணரும் (புறம். 63) போற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனின் மறப்பண்பினை எடுத்துரைத்த பரணர் பரிசில் வேண்டுவதையும் பொன்னாரத்தைப் பரிசாகப் பெறுவதையும் காணமுடிகிறது (Sivaprakasam, 2007).

## ஆளுமைத்திறன்

ஆளுமை என்பது இலட்சக்கணக்கான இழைகளால் சமுதாயத்துடன் பிணைக்கப்பட்ட ஒன்றாகும். அறிஞர் பெருமக்களிடையே ஆளுமை குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவுவதைக் காணமுடிகிறது . ஒருவனது குடும்பம், அவன் வாழும் சூழ்நிலை, பாரம்பரியம் இயல்பாக அமையக்கூடிய உள்ளக் கிளர்ச்சி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடன் அமைவதை ஆளுமைத் திறன் என்று கருதமுடிகிறது.

“ஒரு மனிதனின் உலக கண்ணோட்டம் அல்லது உலகளாவிய பார்வை தான், ஆளுமையின் மையக்கருவாக விளங்குகின்றது. அவற்றில் தான் மனிதனின் கோட்பாடுகளும் லட்சியங்களும் வாழ்க்கை நோக்கங்களும் உருக்கொண்டு, அவனுடைய சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஆளுமையாக வெளிப்படுகின்றது. மேலும் அழகியல், கலை, இலக்கியம் ஆகியவை உருப்பெறுவது ஆளுமையின் பிரத்தியேகமான செயல்பாடுகள்தான்” என்று கவிதையெனும் மொழி நூல் எடுத்துரைக்கின்றது (Nadarasan, 2002).

## போர்கள் நிகழ்வதற்கான காரணங்கள்

தன்னை எதிர்த்த பகைவரை அழிக்கவும், பணியச் செய்யவும், பணிந்தவரிடமிருந்து திறை பெறவும், பகைவரை வென்று செல்வம் பெருக்கவும், நிலத்தை விரிவு படுத்தவும், படைபலத்தை நிரூபிக்கவும், பிறரிடமிருந்து தன் நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவும், தன்னை இழிவுபடுத்தும் பொழுது தன் பெயருக்குக் கலங்கம் ஏற்படாமல் காத்துக் கொள்ளவும், தன் புகழினை நிலைநிறுத்தவும் என இதுபோன்ற சூழல்களில் போர்கள் நிகழ்வதைக் காணமுடிகிறது. ஆளும் அரசன் ஆளுமைத்திறனுடன் இருக்கவேண்டியது அவசியமாகிறது. அப்பொழுதுதான் மேற்கண்ட சூழல்கள் ஏற்படும்பொழுது அவனால் தன் இருப்பை நிலைநாட்டி வெற்றி பெற முடியும்.

## மறப்பண்பு

புறநானூற்றைக் காட்டிலும் பதிற்றுப்பத்தே சேர வேந்தர்களின் வீரத்தினை விரிவாக கூறுகிறது. போருக்கு அடிப்படையாக அமைவது வீரமாகும். போர் நிகழ்வுகள் மேற்கண்ட பல காரணங்களினால் நிகழ்கின்றன. வீரம் காரணமாக எழுகின்ற "போரும் பூசலும் மேலோட்டமாக நோக்கின் மனித நேயத்திற்கும், நலத்திற்கும் எதிராக அமையினும், குடிமக்கள் நாடு என்ற நோக்கில் ஆழமாகக் காண முயன்றால் அவையும் மனித நல நோக்கிலேயே அமைகிறது" என்று மனித மேம்பாடும் சங்க இலக்கியமும் நூல் உரைக்கிறது (Sukanya, 2008). அக்காலத்தில் செல்வம் பெருக்கும் வழிகளாகப் போர் நிகழ்வுகள் இருந்திருக்கிறது. செல்வத்தைப் பெருக்குவதற்காக நிகழும் போர்கள் அறமாகவும் கருதப்பட்டிருக்கிறது.

போர்கள வெற்றியின் விளைவாக இமயமலையில் விற்பொறித்தது, ஆரிய மன்னரைப் பணியச் செய்தது, யவனரைச் சிறைப்படுத்தியது,

அமைவரல் அருவி இமயம்விற் பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு,
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து"

ஆகியவற்றை அறியமுடிகிறது (Puliyur Kesigan, 2017). இதே போல் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு கற்கோவில் அமைப்பதற்காக ஆரிய மன்னரை வென்றது, ஆநிரைகளைக் கவர்ந்தது, நன்னன் வேண்மானின் வியலூரையும் கொடுகூரையும் அழித்தது, மோகூரின் குறுநில மன்னனான பழையனின் காவல் மரமான வேம்பினை வேருடன் வெட்டி வீழ்த்தியது, சோழர் குடியினர் 9 பேரும் அழியும் படியாக உறையூரின் தெற்கு நேரி வாயிலின் புறப்பகுதியில் தங்கியது ஆகியனவற்றையும் பின்வரும் அடிகளின் மூலம் அறியமுடிகிறது.

கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கான்நவில் கானம் கணையில் போகி
ஆரிய அண்ணலை வீட்டிப் பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி
இனம்தெரி பல்லான் கன்றொடு கொண்டு
மாறா வல்வில் இடும்பில் புறத்திறுத்து
உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கறை நண்ணிக் பொடகூர் எறிந்து
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை எழித்த நறும்பல் பெண்டில்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்,
குஞ்சர ஒழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவின் சோழர் குடிக்குரியோர்

ஒன்பதின்மர் வீழ வாயிற் புறத்திறுத்து

நிலைச் செருவின் ஆற்றலை அறுத்துக்

கெடலருந் தானையொடு" (Puliyur Kesigan, 2017)

இவை மட்டுமல்லாது கடல் கடந்து பகை அரசனுடைய காவல் மரமான கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தியது, நிலம் அதிரும் படியாகப் போர் புரிய வந்த பகை அரசரது பெருமையை அழித்தது, பகை அரசர் எழுவரை வென்று அவர்களுடைய எழுமுடிகளைக் கைப்பற்றியது, பகை நாட்டை வென்று பல இடங்களையும் தீயிட்டு அழித்தது, மாற்றரசர் அரண்களை யானைப்படை கொண்டு தகர்த்தது, (பகைவரின் அரண்கள் பலவற்றையும் வென்று உட்புகுந்து சோறு சமைத்து உண்டது, உரைத்த வஞ்சினம் பிழையாகாதவாறு பகைவரை வெல்லும் மறவர் படையும் சிதறடித்து ஓடச் செய்யும் குதிரைப்படையும் வைத்திருந்தது, தலைசிறந்த யானைப் படையும் பகைவரை எதிர்த்து அழிக்கும் பேராற்றலும் எந்நேரமும் போருக்குத் தயாராகவே இருக்கும் மறவர்ப்படையும் வைத்திருந்தது, இமயம் முதல் குமரி வரை வென்று வெற்றிக் கனியை சுவைத்தது, (யானைகளை வண்டிபூட்டி கொணர்ந்தது முதலான மறச்செயல்கள் யாவும் இருபெரும் வேந்தர்களின் ஆளுமைத்திறனுக்கும் சான்றாக அமைகின்றது (Puliyur Kesigan, 2017)

## செங்கோன்மை

அறநெறியுடன் செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவமழை தவறாது பொழிந்து விளைச்சலைப் பெருக்கும்.

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட

பெயலும் விளையுளும் தொக்கு"

என்று வள்ளுவரும் உரைப்பதாகத் திருக்குறள் தெளிவுரை கூறுகிறது (Varadharasanar, 2014).

"பலதரப்பட்ட மக்களையும் பஞ்சம், பட்டினி, பசி போன்ற கொடூர உணர்விலிருந்து காப்பாற்றும் பொறுப்பு மன்னனுக்கு உரியது. இரவலர்களுக்கும் வறியவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பொருள் கொடுத்துக் காப்பாற்றுவதோடு பகை மன்னர்களிடமிருந்து நாட்டை மீட்டுப் பாதுகாப்பது பெரும் கடமையாக இருந்தது" என்று புறநானூற்றில் வாழ்வியல் விழுமியங்கள் நூல் கூறுகின்றது. இவை யாவும் செங்கோன்மையால் விளையும் பயனாகும் (Sivaprakasam, 2007).

தன் நாட்டையும் மக்களையும் காப்பதுடன் அறமற்ற கொடுங்கோல் மன்னரை வென்று அவன் நாட்டையும் பேணியது, வணிகர்களின் குடும்பத்தினரையும் காத்தது, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் உழவர்களின் சுற்றத்தையும் பேணியது நாட்டில் பருவமழை பொழிந்து பிணியும் வறுமையும் நீங்கப்பெற்று நாடு வளம் பெற்றது,(பதிற். 2: 13) துறவறம் பூண்ட துறவி உட்பட நாட்டார் அனைவரும் நாட்டை விட்டு நீங்காத வகையில் வளம் நிறைந்த போக பூமியாக விளங்க வைத்தது, (பதிற். 2: 15) ஆன்றோரை வணங்கியும் இல்வாழ்க்கையில் இன்புற்றும் வாழ்ந்திருந்தது, (பதிற். 5: 48) காவிரி, ஆன் பொருநை, குடவனாறு என்னும் முக்கூடலின் நீர் வளத்தினால் கரும்பு விளையும் மருதநில வளத்தினை பெற்றிருந்தது, பகைவர் பணியும்பொழுது அவர் நாட்டிற்கும் அரணாக நின்று காவல் புரிந்தது (பதிற். 5: 50) போன்ற செங்கோன்மைப் பண்புகள் யாவும் அறநெறியே தம் வாழ்வாகக் கொண்ட இருபெரும் வேந்தரின் ஆளுமைத்திறனுக்கு சான்றாகிறது. செங்கோலாட்சி நிலவும் நாட்டில் மக்கள் அனைவரும் பாதுகாப்புடையவராகவும் மகிழ்ச்சியுடையவராகவும் வளம் மிக்கவர்களாகவும் ஒருவருக்கொருவர் சகோதரமனப்பான்மையுடன் ஒன்றுபட்டு சமூக ஒருமைப்பாட்டிற்கு வழி காண்பவராகவும் இருக்கும் சூழல் அமைகிறது. இத்தகைய சூழல் இருபெரும் வேந்தரும் ஆட்சிபுரிந்த காலங்களில் மக்கள் பெற்றிருந்ததைக் காண முடிகிறது.

## கொடைப் பண்பு

வேந்தர்களுக்கு வீரமும் கொடையும் முகத்தில் உள்ள இரண்டு கண்களைப் போன்றது என்று கூறினால் அது மிகையாகாது. வீரத்தின் மூலமே கொடையை நிகழ்த்த முடியும். பகை நாட்டை வென்று விலையுயர்ந்த பொருள்களைக் கவர்ந்து இரவலர்களின் துயர் களைவது ஆற்றல்சார் வேந்தனின் அரும் பணியாகும். அறிஞர்கள் உரைத்த கருத்துகள் மூலம் கொடையின் தன்மையினையும் கொடையின் வகைகளையும் அறியமுடிகிறது. "அக்காலத் தரசர் அறம் நோக்கியும், கலை வளர்ச்சி பற்றியும், ஊழியப் பாராட்டாகவும், வினையூக்கற்பொருட்டும், பல்வேறு கொடை நிகழ்த்தி வந்தனர். அவை உண்டிக் கொடை, பொற்கொடை, ஊர்திக்கொடை, விலங்குக்கொடை, நிலக்கொடை, மகட்கொடை, ஆட்சிக்கொடை, சின்னக் கொடை, பெயர்க் கொடை என ஒன்பான் வகைப்படும்" என்று பழந்தமிழாட்சி நூல் எடுத்துரைக்கின்றது (Devaneya paavanar, 2000).

பகைவரை வென்று கைப்பற்றிய பொருள்களைத் தனக்கெனப் பேணாது இரவலர்களின் வறுமைத் துயரைக் களையும் இப்போர்ச் செயலானது அறவழிப்பட்டதாகிறது. இச்செல்வங்களுடன் தன் நாட்டுச் செல்வங்களையும் நிரம்பப் பெற்றிருந்தது, வானமே பொய்ப்பினும் தன்னை நாடியவரின விருப்பினை நிறைவு செய்வதில் நிகரற்றவனாக விளங்கியது, இரவலரின் தகுதியைப் பாராது சம நோக்குடையவராகப் பொருள் வழங்கி துயர் களைந்தது, போர்க்களம் வென்று மறவர்களுடன் உடன் அமர்ந்து பகிர்ந்து உண்டது (Puliyur Kesigan, 2017).

பாணர், கூத்தர், விறலியருக்கு உணவு அணிகலன் யானை குதிரைகளை வரையாது வழங்கியும் குறையாத செல்வங்களைப் பெற்றிருந்தது, தன்னை நாடிப் பரிசுப் பெற்றோர் வேறொருவரை நாடாத வகையில் நிறைந்த பொருள்களை வாரி வழங்கியது, கடல் நீர் உள் செல்லுமாறு வலிமையான கடற்படையைக் கொண்டு கடற்போர் நிகழ்த்திப் பகைவரை வென்று கைப்பற்றிய செல்வங்களை இரவலர்களுக்கு வழங்கியது முதலான கொடைப் பண்புகள் யாவும் அறநெறியையே தம் மூச்சாகக் கொண்ட இருபெரும் வேந்தரின் ஆளுமைத்திறனின் வெளிப்பாடாக அமைகிறது (Puliyur Kesigan, 2017).

## சாதனையில் ஒற்றுமையும் விஞ்சிய சாதனையும்

இருபெரும் வேந்தரும் இமயத்தில் வில் பொறித்தது, பகை அரசனுடைய காவல் மரத்தை வெட்டி வீழ்த்தியது, ஆற்றல் மிகுந்த நாற்படைகளும் பெற்றிருந்தது, களம் வென்று பல வெற்றிகள் பெற்றது, மக்கள் அனைவருக்குமாக நல்லாட்சியை வழங்கியது, இரவலர்களின் துயர் களைந்தது உள்ளிட்ட பண்புகள் யாவும் ஒற்றுமையாக இருப்பதாக காணமுடிகிறது. தரைப் படைகள் மூலம் பகைவரை வென்று இமயத்தில் வில் பொறித்தக் காரணத்தால் நெடுஞ்சேரலாதன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என அழைக்கப்பட்டான். வலிமை மிகுந்த கடற்படைகள் மூலம் ஆழ்கடலில் கடற்போர் நிகழ்த்தி பெரும் வெற்றிப் பெற்றமையால் செங்குட்டுவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் எனப் போற்றப் பெற்றான். தரைப்போர் வெற்றியை விட ஆழ்கடலில் நிகழ்ந்த கடற்போர் வெற்றியே தந்தையை விஞ்சிய மகனாகச் செங்குட்டுவனை அடையாளம் காண வைக்கிறது.

## முடிவுரை

மேற்கண்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தந்தையும் மகனுமான நெடுஞ்சேரலாதனும் செங்குட்டுவனும் மறப்பண்பிலும் செங்கோன்மையிலும் கொடைப்பண்பிலும் ஆளுமைத்திறனை வெளிப்படுத்துவதில் நிகரற்றவராக விளங்கினமை தெளிவாகிறது. ' அப்பாவுக்கு ஏத்த தப்பாத பிள்ளையாக ' வினையாற்றி நெடுஞ்சேரலாதனின் புகழுக்குச் செங்குட்டுவன் மேலும் பெருமை சேர்த்திருப்பது புலனாகிறது.

இமயத்தில் வில் பொறித்தது, எழுமுடியைக் கவர்ந்தது, காவல் மரத்தை வெட்டி வீழ்த்தியது, கண்ணகிக்கு கற்கோவில் அமைக்கப் படை வென்று கல் கொணர்ந்தது, பகைவெல்லும் வலிமை மிகுந்த நாற்படைகளையும் பெற்றிருந்தது, நீர் வளம் காத்து விளைச்சல் பெருக வழி கண்டது, பாணர்

கூத்தர் விறலியர் உள்ளிட்ட இரவலர் அனைவரின் வாழ்விலும் வளம் சேர்த்தது, செல்வத்தைப் பெருக்கக் களம் சென்றது, அறவழியில் வெற்றிக்கண்டது, பெற்ற செல்வத்தைப் பேணாது இரவலர்களுக்கு வாரி வழங்கியது, செந்தமிழ்ப்பா இயற்றிய புலவருக்கு நாட்டு வருவாயில் பாகம் தந்தது, குன்றேறி கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலான ஊர்களைத் தானம் கொடுத்தது, பெற்ற மகனையே கொடை வழங்கியது உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளிலும் இருபெரும் வேந்தரும் ஆளுமைத்திறனுடன், நாட்டிற்கும் மக்களுக்குமாக வாழ்ந்தும் வழிகாட்டியும் காலம் போற்றும் கலங்கரை விளக்கமாக விளங்கினமையை அறிய முடிகிறது.

## References


Chidambaranar, A., (1963) Cherar varalaaru, Kazhagam, Chennai, India.

Devaneya paavanar, N., (2000) Pazhantamilatchi, Tamilman Padippagam, Chennai, India.

Nadarasan, Thi. Su., (2002) Kavithaienum Mozhi, Kangai Putthaga Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2017) Pathitruppatthu Thelivurai, Kangai Putthaga Nilaiyam, Chennai, India.

Ramakrittinan, Aa., (2015) Tamilaga varalaarum Thamilar Panpaadum, Sarvothaya Ilakkiya Pannai, Madurai, India.

Ramalingam, Aranga., (2002) Sanga Ilakkiyathil Vendar, Bharathi Puthakalayam, Chennai, India.

Rasamanikkam, Ka., (2015) Pandai Thamilar valviyal, Tamil kudil Pathippagam, Salem, Imdia.

Sivaprakasam, Ku., (2007) Purananuutril valviyal vilumiyangal, Thirukkural Pathippagam, Chennai, India.

Sukanya, Ko., (2008) Manitha Membhadum Sanga Ilakkiyamum, Tamil Saral, Chennai, India.

Varadarasanar, Mu., (2014) Thirukkural Thelivurai, Kazhagam, Chennai, India.

Vellaivaaranan, Ka., (2012) Sanga Kala Tamil Makkal, Jeganathan Patthaga Nilaiyam, Thrichy, Chennai, India.

Venkadasamy Seeni Mayilai., (2007) Cheran Chenkuttuvan, Gowra Padippagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License